பக்கங்கள் 15+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 10 புதன்கிழமை 27.11.2025 | அதிர்வு 120

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை 3 நாள்களுக்கு இல்லை!

### புதிய திகதிகள் அறிவிப்பு




இலங்கையின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, 2025ஆம் ஆண்டுக்கான 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## இயற்கைப் பேரனர்த்தங்களுக்கு மத்தியிலும் மாவீரர்களை அஞ்சலிக்கத் தமிழர் தேசம் தயார்



தமிழினத்தின் விடுதலைக்காக – தமிழீழ இலட்சியத்துக்காகப் போராடி – களமாடி உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களை – கல்லறை மேனியர்களைத் தமிழர்கள் நினைந்துருகி அஞ்சலிக்கும் மாவீரர்கள் நாள் இன்றாகும். கொட்டும் மழை மற்றும் பேரனர்த்தங்களுக்கு மத்தியிலும் மாவீரர் நினைவேந்தலை இன்று மாலை பேரெழுச்சியுடன் முன்னெடுக்கத் தமிழர் தாயகம் தயாராக உள்ளது.

இன்றைய நாள், ஆயிரமாயிரம் அக்கினிப் பந்துகளாக, எரிநட்சத்திரங்களாக தம்மை மாற்றிக்கொண்டவர்களை நினைந்துருகும் நாள். தமிழினத்தின் இருப்புக்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்த உன்னதமானவர்களை தமது நெஞ்சத்தின் நினைவாலயத்தில் நிறுத்தி தமிழர்கள்



# 40 பேரைப் பலியெடுத்த மோசமான காலநிலை!

## இருபதுக்கும் மேற்பட்டோர் மாயம்; பதுளை மாவட்டத்தில் பெரும் பாதிப்பு

இலங்கை முழுவதும் நிலவும் மோசமான காலநிலை காரணமாக 40 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளதுடன் 20 இற்கும் மேற்பட்டோர் காணாமல்போயுள்ளனர்.

நாடு முழுவதும் பெய்யும் கனமழை, வெள்ளம், பலத்த காற்று மற்றும் மண்சரிவுகளால் பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்டமே பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. இந்த மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் பெய்த அடைமழை மற்றும் மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களால் 21 பேர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் காணாமல்போயுள்ளனர்.

அத்துடன் இந்த மாவட்டத்தில் 03▶





# கால்வாய்க்குள் பாய்ந்த கார்! சிறுமி உட்பட மூவர் மரணம்!!

## சாய்ந்தமருது பிரதேசத்தில் துயரம்

**(நமது நிருபர்கள்)**

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசல் பின் வீதியில் பாதையை விட்டு விலகி சொகுசு கார் ஒன்று கால்வாயில் பாய்ந்தது. அந்தக் காரில் பயணித்த சிறுமி உள்ளிட்ட மூவரும் பலியாகியுள்ளனர்.

இந்தத் துயரச் சம்பவம் இன்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

கால்வாயில் வெள்ளம் கரைபுரண்டோடியது. கால்வாய் அருகில் உள்ள பாதையில் பயணித்த வெசல்ரக சொகுசு கார் பாதையை விட்டு விலகி வெள்ளத்தில் பாய்ந்தது.

காரில் இருந்த 62, 59 வயதுடைய தம்பதியரும், அவர்களின் பேரப்பிள்ளையான 6 வயது சிறுமியும் குற்றுயிராக மீட்கப்பட்டனர்.கார் நீரில் முற்றாக மூழ்கியிருந்த நிலையில் அவர்களைக் காப்பாற்ற சுமார் 40 நிமிடங்களுக்கு மேலாக மீட்புத் தொண்டர்கள் போராடினர்.

அப் போராட்ட மீட்புக்கு பின்னரே கார் கரையேற்றப்பட்டு காருக்குள் இருந்த மூவரையும் அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

எனினும், அவர்கள் மூவரும் மரணமடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேச ஜனாஸா அமைப்புக்கள், கல்முனை சுழியோடிகள், மீட்பு படையினர், பொலிஸார், கடற்கடையினர், பிரதேச செயலக அதிகாரிகள், கல்முனை மாநகர சபை ஊழியர்கள், பொதுநல அமைப்புக்களை சேர்ந்தவர்கள் எனப் பலரும் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

சம்பவ இடத்துக்குக் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் போன்றோர்களும் விஜயம் செய்திருந்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணை களை சாய்ந்தமருது பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.











## 40 பேரைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

886 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 89 பேர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 4 பேர் மாயமாகியுள்ளனர்.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக கடந்த 24 மணிநேரத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் காணாமல்போயுள்ளனர்.

இதேவேளை, பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் எந்தவொரு அவசரகால சூழ்நிலைகளையும் 117 என்ற அவசர தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு பேரிடர் மேலாண்மை மையம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

## இயற்கைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுகூரும் நாள். தமிழர் தாயகம் சுதந்திரத் தாகம் கொண்டு எழுச்சிகொள்ளும் மகத்தான நாள். தமிழர் தாயகத்தின் விடிவுக்காகவும்தமிழர்விடுதலைக்காகவும் தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்மினிய வீரர்களை தமிழர்கள் தங்களின் இதயக் கோவில்களில் நிறுத்தி பூசிக்கும் நாள்.

எதையும் தாங்கும் இதயத்துடன் சாவுக்கு அஞ்சாத வீரத்துடன் சாவைத் தழுவியவர்கள்தான் மாவீரர்கள். அவர்களின் துயிலும் இல்லங்கள் தாயகத்தில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன அல்லது சீரழிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தரைமட்டமாக்கப்பட்ட துயிலும் இல்லங்களின் எச்சங்களை மீட்டெடுத்து இன்றைய மாவீரர் நாளை எழுச்சியுடன் கடைப்பிடிக்கத் தாயக தேசம் தயாராகியுள்ளது.

வீதிகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கின்றன. மாவீரர் அலங்கார வளைவுகள் மிடுக்குடன் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கில் இம்முறை சுமார் 30 மாவீரர் துயிலும் இல்லங்களில் பிரதானமாக அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. தவிர, தனி மாவீரர் நினைவிடங்கள், உள்ளூராட்சி சபைகள், அரசியல் கட்சிகளின் பணிமனைகள் மற்றும் தனிநபர்களால் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்களிலும் மாவீரர் நாளைக் கடைப்பிடிக்க ஏற்பாடாகியுள்ளது.

இந்த வருடம் வழக்கத்திலும் பார்க்க அதிகளவான இடங்களில் மாவீரர் நினைவேந்தல்கள் ஏற்பாடாகியுள்ள அதேசமயம், தமிழர் தாயகத்தின் முக்கிய நகரங்கள் மற்றும் பிரதேசங்கள் பலவும் சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அத்துடன், மாவீரரை நினைவேந்தும் பதாகைகள், பொதுச் சின்னங்கள் என்பவையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இது தவிர புலம்பெயர் தேசங்களிலும் தமிழர்கள் அதிகம் வாழும் பிரதேசங்களில் விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்களில் நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இன்று வழமை போன்று மாலை 6.05 மணிக்குத் துயிலும் இல்லங்கள், நினைவாலயங்கள், பொது இடங்கள், வீடுகளில் சமநேரத்தில் சுடர்கள் ஏற்றப் பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத் தப்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதல் மாவீரரான லெப். சங்கர் (செல்வச்சந்திரன் சத்தியநாதன்) உயிர் நீத்த (1982) நவம்பர் 27ஆம் நாளில் அந்த அமைப்பின் சார்பில் மாவீரர்களானவர்கள் நினைவு கூரப்படுகின்றார்கள். 1989ஆம் ஆண்டு முதல் கட்டமைக்கப்பட்ட நிகழ்வாக மாவீரர் நாள் தமிழ் மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜி.சீ.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மூன்று நாள்களுக்கு நடைபெறாது என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, இன்று (நவம்பர் 27), நாளை (நவம்பர் 28) மற்றும் நாளைமறுதினம் (நவம்பர் 29) ஆகிய மூன்று தினங்களிலும் பரீட்சை நடைபெறாது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

மேற்படி மூன்று நாள்களிலும் நடைபெறவிருந்த பரீட்சைகள் முறையே டிசம்பர் 7, 8 மற்றும் 9 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஏனைய பரீட்சைகள் வழமை போல் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# கல்முனைப் பிரதேசத்தில் வீதியைத் தாண்டிய கடல்

## படகுகள் வெளியேற்றம்; மக்கள் அச்சத்தில்

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனைப் பிரதேசத்தில் இன்று வியாழக்கிழமை கடல் கொந்தளிப்பு காரணமாக சீறி எழுந்த அலைகள் வீதியைத் தாண்டி ஊருக்குள் போக முற்பட்டது.

மீனவர்கள் தமது படகுகளை அவசர அவசரமாகப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர்.

கல்முனையின் கரையோர கடல் பகுதிகளில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் மக்கள் அச்சத்தில் உறைந்து போய் உள்ளனர்.

குறிப்பாக பெரியநீலாவணை, மருதமுனை, கல்முனை போன்ற கரையோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பு நிலையில் காணப்படுகிறது.

கடல் அலைகளின் சீற்றம் காரணமாக வீதீகளில் கடல் அலை பரவுவதோடு கடல் அரிப்பும் பாரியளவில் இடம்பெறுகின்றது.

மீனவர்களது. மீன்பிடிப் படகுகள் யாவும் வீதிக்கு இழுக்கப்படுகின்றன. கடல் பகுதிகளை பார்வையிடச் செல்லும் மக்கள் அவதானத்துடன் நடந்துகொள்ளுமாறு பெரியநீலாவணை பொலிஸார், மக்களை அறிவுறுத்துவதைக் காணக்கூடியதாக இருந்தது. இன்று கல்முனையில் மழை சற்று குறைந்திருந்தாலும் காற்றின் வேகம் சற்று அதிகமாகவே காணப்படுகின்றது. வெள்ள நிலையும் தொடர்கின்றது. மக் களது இயல்பு நிலை முற்றாக சீர்குலைந்துள்ளது.











# நாடாளுமன்றத்தில் இன்று மாவீரர்களுக்கு தமிழரசுக் கட்சியினர் சுடரேற்றி அஞ்சலி!

நாடாளுமன்றத்தில் மாவீரர்களுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் இன்று மாலை சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ச.குகதாசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.







# நுவரெலியா - கம்பளை பிரதான வீதியில் கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம்

(க.கிஷாந்தன்)

நுவரெலியா – கம்பளை பிரதான வீதியில் பல பெரிய பாறைகள் சரிந்து விழும் அபாயம் உருவானதைத் தொடர்ந்து, அவ்வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியருகில் அபாயகர நிலையில் இருந்த ஒரு பெரிய பாறை பிரதான மார்க்கத்தில் விழுந்தது. இதனுடன், கொத்மலை கெரண்டி எல்லப் பகுதியில் பெய்த கன மழையின் காரணமாக அந்தப் பகுதியிலுள்ள தேயிலைத் தோட்டத்திலிருந்து பல பெரிய பாறைகள் சரிந்து தோட்டப் பகுதிகளில் விழுந்துள்ளன. இதில் மேலும் பிரதான வீதிக்குச் சரிந்து வரக் கூடிய அபாயம் நீடிப்பதால், பாதுகாப்பு நடவடிக்கைக்காக வீதி மூடப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

கெரண்டிஎல்லப் பிரதேசத்தில் பல இடங்களில் மண் மேடுகளும் சரிந்து விழுந்துள்ளன. தற்போது அவை அகற்றப்பட்டு வீதி போக்குவரத்து சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீதி மீண்டும் திறக்கப்படும் வரை வாகன சாரதிகள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# பாலக்குடா களப்பில் படகு கவிழ்ந்து இளைஞர் ஒருவர் பரிதாப மரணம்!

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி பாலக்குடா களப்பில் படகு கவிழ்ந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கற்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் பாலக்குடா – சோத்துப்பிட்டு வாடிய பகுதியைச் சேர்ந்த ஹேரத் முதியன்சேலகே ஜுட் கிருஷாந்த சவிந்த (வயது 22) ஆவார்.

படகு இயந்திரம் தொழில்நுட்பக் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளது. குறித்த இளைஞர் பழுதுபார்க்கப்பட்ட இயந்திரத்தை படகில் பொருத்தி சோதிக்க நடவடிக்கை எடுத்தபோது பாலக்குடா களப்பில் படகு கவிழ்ந்து இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

களப்பில் மூழ்கிய இளைஞர் உள்ளூர் வாசிகளால் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக கற்பிட்டி மருத்துவமனையில் அனுமதித்தனர் என்றும் பின்னர் அவர் உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இது பேரிழுக்கு!

மோசமான காலநிலையால் நாடு அல்லோலகல்லோலப்படுகிறது. பல இடங்களிலும் வெள்ளம். மக்களின் இடஒபெயர்வு. மிகவும் இக்கட்டான நெருக்கடி காலத்தை பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்.

உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப் பட்டுள்ளது. பல இடங்களிலும் நீதி மன்ற அமர்வுகள் கூட தள்ளிப் போடப் பட்டுள்ளன. நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதத்தை தள்ளிப் போடுவது பற்றி சிந்திக்கப்படுகிறது. மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளது.

மருத்துவ, சுகாதார சேவைக மிக முக்கியமாக தேவைப்படும் இந்தச் சமயத்தில்தான் கற்றறிந்த பெரியவர் களைக் கொண்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனது தொழிற்சங்க நடவடிக்கையை தொடரும் கீழ்த்தர மான தீர்மானத்தை எடுத்து இருக் கின்றது. இதுவரையில், தற்போதைய காலநிலை நெருக்கடியைக் கருத்தில் கொண்டாவது அந்தத் தொழிற்சங்கப் போராட்டத்தைக் கைவிடும் அறி விப்பு ஏதும் மருத்துவ அதிகாரிகள் சங்கத்திடம் இருந்து வரவே இல்லை.

அதுவும் நாடு நெருக்கடியில் சிக் குண்டு மிக மோசமாகப் பரிதவிக்கும் இந்தச் சமயத்தில்தான் சுகாதார - மருத்துவ சேவை உச்சமாக தேவைப் படுகின்றது. அந்த நெருக்கடிச் சூழலை - அத்தியாவசிய கட்டாயத்தை - கீழ்த்தரமாகத் தனக்கு பயன்படுத்து கின்றதா அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் என்ற கேள்வி எழுந்திருக் கின்றது

நேற்று காலை சுகாதார அமைச்சரு டன் நடைபெற்ற பேச்சுவார்த்தைக ளுக்கு மத்தியிலும், அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனது தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர முடிவு செய்துள்ளதால் நாடு முழுவதும் நோயாளிகள் தொடர்ந்து பாதிக்கப்பட் டுள்ளனர் எனச் செய்திகள் வெளியா கியுள்ளன.

கலந்துரையாடலின் போது சில பிரச்சினைகள் குறித்து உடன்பாடு ஏற்பட்டாலும், கூட்டம் 'முழு வெற்றி பெறவில்லை' என்று சங்கத்தின் செய லாளர் டாக்டர் பிரபாத் சுகததாச தெரி வித்திருக்கின்றார்.

வேலைநிறுத்தம் தீவிரப்படுத்தப்ப டுமா என்பது உட்பட மேலும் முடிவு கள் வரும் வாரத்தில் எடுக்கப்படும் என்றும் கூட அவர் நேற்றுக் கூறியிருக் கின்றார்.

நடந்து வரும் தொழிற்சங்க நடவடிக் கையின் கீழ், தனியார் துறை மருந் தகங்கள் மற்றும் ஆய்வகங்களிலிருந்து மருந்துகள், ஆய்வக சோதனைகள் அல்லது மருத்துவ உபகரணங்களைப் பெறுவதற்கு நோயாளிகளுக்கு மருந் துச் சீட்டுகளை வழங்குவதை மருத்து வர்கள் தவிர்த்து வருகின்றனர். இத னால் பல நோயாளிகள் அத்தியாவசிய சிகிச்சையை அணுக முடியாமல் தவித்து வருகின்றனர். சிலர் சிகிச்சை களை ஒத்திவைக்கவோ அல்லது மாற்று ஆலோசனைகளைப் பெறவோ கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

நிலைமையை மறுஆய்வு செய்ய வும், மேலும் கடுமையான தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கான சாத்தி யக்கூறுகள் குறித்து விவாதிக்கவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு நேற்று கூடியது. அதன் பின்னரும், காலச் சூழ்நிலையைக் கருதி தொழிற்சங்க நடவடிக்கை யைத் தற்காலிகமாகவேனும் ஒத்தி வைப்பதான முடிவு எடுக்கப்படவே யில்லை. தொடரவே முடிவு செய்யப் பட்டுள்ளது.

இந்தச் சமயத்தில், தொழிற்சங்க நடவடிக்கையை மருத்துவர்கள் தற் காலிகமாகவேனும், நிறுத்தாவிடில் அது தெய்வீக சேவை எனப் போற்றப் படும் மருத்துவப் பணிக்கு பெரும் இழுக்கு.



## முல்லைத்தீவில் சீரற்ற காலநிலையால்

# வீதியில் வீழ்ந்த மரம் போக்குவரத்து பாதிப்பு!

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு நகரின் வீதியின் குறுக்கே இன்று புளியமரம் சரிந்து விழுந்ததில் வீதி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கனமழை பெய்து வரும் நிலையில் இன்று காலை முல்லைத்தீவு நகரில், செலான் வங்கியின் முன்பாக உள்ள வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் வீதியில் ஒரு புளியமரம் சரிந்து விழுந்துள்ளது. இதனால். குறித்த இடத்தில் வீதிப்போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டிருந்தது.

இவற்றை விரைந்து அகற்றும் பணியில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணியாளர்கள், பிரதேச சபை பணியாளர்கள், மின்சார சபை பணியாளர்கள் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவுடன் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை தொலைத்தொடர்பு வலையமைப்பின் தொலைபேசிக் கம்பங்கள் சேதம் அடைந்துள்ளன. தற்போது அவற்றை விரைந்து சீர் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த அனர்த்தத்தினால் கம்பங்களின் இணைப்புக்கள் மிகவும் தாழ் நிலையில் காணப்படுகின்றன. இவற்றைச் சீரமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.







# வெள்ளத்தால் மன்னம்பிட்டி பாதை பூட்டு: கொழும்பு - மட்.,அம்பாறை பயணம் தடை!

(வி.ரி.சகாதேவராஜா)

ஹபரண – பொலனறுவை பிரதான வீதியில் உள்ள மன்னம்பிட்டிப் பாலமும் அதனையண்டிய பிரதான வீதியும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் கொழும்பு – மட்டக்களப்பு மற்றும் அம்பாறை பிரதான வீதிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பல வீதிகள் போக்குவரத்துக்கு பொலிஸாரால் போக்குவரத்துக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம் படுவான்கரைப் பெருநிலத்துக்கும், எழுவான்கரைப் பகுதிக்குமான பிரதான போக்குவரத்துகள் வெள்ளநீர் காரணமாக தடைப்பட்டுள்ளது.

பட்டிருப்பு பாலத்தின் ஊடான போக்குவரத்து மண்முனை பாலத்தின் ஊடான போக்குவரத்து வவுணதீவு பாலத்தின் ஊடான போக்குவரத்து கிரான் புலிபாஞ்சகல் மதகு ஊடான போக்குவரத்து பழுகாமம் பெரியபோரதீவு இடைப்பட்ட போக்குவரத்து வெல்லாவெளி மண்டூர் பாதை போக்குவரத்து என்பன துண்டிக்கப்பட்டுள்ளன.

அம்பிளாந்துறை வாவி படகுச் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. அந்தப் பாதையும் தடைப்பட்டுள்ளாக அறிய முடிகிறது.

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கிட்டங்கி – நாவிதன்வெளி மற்றும் நாவிதன்வெளி – தம்பலவத்தை பாதைகள் முற்றாக மூடப்பட்டுள்ளன.

அதேவேளை, காரைதீவு – அம்பாறை பிரதான வீதி பொலிஸாரின் கண்காணிப்பில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் போக்குவரத்து நடைபெற்றது. எனினும் நேற்று முதல் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கிட்டங்கி தாம்போதியில் வெள்ளம் பீறிட்டு பாய்கிறது. ஆதலால் இவ் வீதி பொலிஸாரின் கண்காணிப்பில் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளது. கடற்படையினரின் அத்தியாவசிய தேவைக்கு மாத்திரமே படகுச்சேவை இடம் பெற்று வருகின்றது.

மேலும் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வீதிகள் பலவும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

குறிப்பாகக் காரைதீவு – அம்பாறை பிரதான வீதியில் காரைதீவு மற்றும் வளத்தாப்பிட்டி பிரதேசத்தில் வெள்ளம் வீதிக்குக் குறுக்காகப் பாய்வதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

நீத்தையாறு அருகே சாகாம வீதியிலுள்ள மதகு ஊடாக 2 அடி அளவான வெள்ள நீர் வடிந்தோடுவதால் அவ்வழியில் பயணம் செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்தோடு மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் அட்டாளைச்சேனை, தைக்கா நகர் , அக்கரைப்பற்று, நிந்தவூர்,காரைதீவு, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, கல்முனை , நாவிதன்வெளி, மருதமுனை, பெரியநீலாவணை போன்ற பிரதேசங்களும் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள சில வீட்டுத்திட்டங்களும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

மாவட்டத்தில் தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றது. இதனால் தாழ்நிலப் பிரதேசங்கள், வீடுகள், வீதிகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கக் கூடிய அபாயமும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# நீரில் மூழ்கிய நுவரெலியா நகரம்!



(க.கிஷாந்தன்)

மலையக பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக இன்று நுவரெலியா நகரத்தின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

நுவரெலியா புத்த மந்திர மாவத்தை, நுவரெலியா பஸ் நிலையம், ஹவா எலியா வைத்தியசாலை மாவத்தை உள்ளிட்ட பல முக்கியச் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்ததால் பொது மக்கள் அசௌகரியத்துக்குள்ளாகியுள் ளனர்.இதற்கிடையில், தலவாக்கலை சென்.கிளயார் தோட்டப் பகுதியில் ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக, அந்தச் வீதியின் போக்குவரத்து ஒரு வழி போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றன.

# வெள்ள நீர் வழிந்தோடும் நீர் நிலைகளுக்கு செல்ல வேண்டாமென மக்களுக்கு எச்சரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் சமீபத்திய கனமழை காரண மாக வெள்ள நீர் வடிகால் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு படிப்படியாக குறைந் தும் சில இடங்களில் அதிகரித்தும் வருகிற நிலையில், பலர் அந்த இடங்களை நேரில் பார்க்க அலையலையாகத் திரள் வது அதிகாரிகளின் கடும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

மாவடிப்பள்ளி மற்றும் கிட்டங்கி போன்ற பகுதிகளில் வெள்ள நீர் இன்னும் முழுமையாக சரிந்து விடாத நிலையில், நதிக்கரைகள், பாலத்தடைகள், ஆறுகரை கள் போன்ற இடங்களுக்கு மக்கள் மிக அருகில்சென்று புகைப்படம்எடுப்பதும், வீடி யோ பதிவு செய்வதும் அதிக ரித்துள்ளது.

வெள்ளநீர் வடிந்தோடும் இத்தகைய இடங்களின் அடிப்பகுதியில் ஆழ்ந்த பள்ளங்கள் உருவாகியிருக்கலாம், மணல்வரடு தளர்ந்திருக்கலாம், திடீர் நீரோட்ட மாற்றங்கள் ஏற்படலாம் என்பதால் பாதுகாப்பு படையினர் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் பொதுமக்களுக்கு அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சிலர் குடும்ப சகிதம் வாகனங்களுடன் வெள்ளப்பாதைகளுக்கு நெருக்கமாக செல்வதும், ஆற்றங்கரையில் நிற்கும் பாதைகளில் தங்குவதும் சறுக்கி விழும் அபாயத்தை அதிகரிக்கிறது.

சமூக ஊடகங்களில் பதிவிடும் முயற் சியால் ஆபத்தான பகுதிகளுக்கு செல் வது அபாயத்தை ஏற்படுத்தும் செயல் என பாதுகாப்பு அதிகாரிகள் கண்டனம் தெரிவித்தும்அவற்றைபொருட்படுத்தாமல் மக்கள் சுற்றுலா பயணிகள் போல படை யெடுத்து வருகிறார்கள்.

வெள்ள நீர் வழிந்தோடும் எந்தப் பகுதியிலும் தேவையற்றுச் செல்ல வேண்டாம் என்றும் ஆறு, ஏரிக் கரைகள், உடைந்த தடைகள், பாலங்களின் அரு கில் நின்று புகைப்படம் எடுப்பதைத் தவிர்க்குமாறும், குழந்தைகளை இத்த கைய பகுதிகளுக்கு அழைத்துச் செல்லா மல் இருக்குமாறும், அதிகாரிகள் வெளி யிடும் எச்சரிக்கைகள் மற்றும் வழிகாட் டுதல்களைப் பின்பற்றுமாறும், பொது மக்கள் தேவையற்ற கூட்ட நெரிசலை தவிர்த்து, பாதுகாப்பை முன்னிலைப் படுத்தி செயல்படுமாறு மக்களை பாது காப்பு படை கேட்டுக்கொண்டுள்ளது.



# மேல் கொத்மலை நீர்த்தேக்க மூன்று வான்கதவுகள் திறப்பு

(க.கிஷாந்தன்)

மேல் கொத்மலை நீர்தேக்கப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் காரணமாக, மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் இன்று அதிகாலை திறக்கப்பட்டுள்ளன என்று நீர்த்தேக்க பொறியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் மழை மேலும் அதிகரித்தால், மீதமுள்ள வான்கதவுக ளும் திறக்கப்படக்கூடும் என்பதால், அணையின் கீழ்ப்பகுதியில் கொத்மலை ஓயாவை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறி வுறுத்தியுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் சென்கிளயார் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது.

இதேவேளை, மேல் கொத்மலை



அணைக்கு கீழே அமைந்துள்ள காமினி திஸாநாயக்க நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வான் மட்டத்தை நெருங்கியுள்ளதால், அதன் வான்கதவுகள் தானாகவே திறக் கப்படவுள்ளன.

இதற்கமைய, நுகாவெல ஆற்றங் கரை, மாவத்துரை, மகாவலி கங்கை, உலப்பனே, கம்பளை, பெரலிய, வெலியியல், கட்டுகஸ்தோட்டை, பொல்கொல்ல உள்ளிட்ட கொத்மலை ஓயா கீழ்பகுதிகளிலுள்ள குடியிருப்போர் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு, நீர்த்தேக்க பொறுப்புப் பொறியலாளர் ஏ.எம்.ஏ.கே. செனவிரத்ன விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது.



# சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட 699 கிலோகிராம் பீடி இலைகள் மீட்பு!

## இரண்டு சந்தேக நபர்களும் கைது

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

இலங்கை கடற்படையினர், புத்தளம் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக் கையின் போது, சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்டு போக்குவரத்துக்குத் தயார் நிலையில் வைத்திருந்த சுமார் 699 கிலோகிராம் பீடி இலைகள் மற்றும் ஒரு கெப் வண்டியுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடல் வழிகள் ஊடாக கடத்தல் உட்பட சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்த்து தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கடற்கரைகளை உள்ளடக்கி கடற்படை வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அதன்படி, வடமேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான இலங்கை கடற்படை கப்பல் தம்பபன்னி புத்தளம் நகரில் நடத்திய இந்தச் சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்துக்கிட மான கெப் வண்டி சோதனை செய்யப் பட்டது.

இதன்போது சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டு போக்குவரத்துக்குத் தயார் நிலையில் வைத்திருந்த சுமார் 699 கிலோ கிராம் பீடி இலைகள் மீட் கப்பட்டன.

இந்த நடவடிக்கைகளின் மூலம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 02 சந்தேக நபர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# உடப்பு கிராமத்தில் முகத்துவாரம் கடலுக்கு வெட்டி விடப்பட்டது!



(உடப்பு க.மகாதேவன்)

நாட்டில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக புத்தளம் உடப்பு கிராமத்தி லுள்ள காளியம்மன் ஆலயத்துக்கு அருகிலுள்ள அறுவாய்ப்பகுதி முகத்து வாரம் நேற்று இரவு கடலுக்கு ஆற்று நீர் பெக்கோ இயந்திரத்தின்உதவியுடன் வெட்டித்திறந்து விடப்பட்டது.

இதனால் அருகிலுள்ள குளங்களி லுள்ள நீர் மட்டங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டநிலையில் அந்த நீரானது இதன் வழியாக கடலுக்கு செல்கிறது.

இதனால் ஊர்மனைக்குள் வெள்ளம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகி றது.






### சிலாபம் பண்டாரவத்தையில்

# ரயில் கடவையில் நடந்த விபத்து; ஒருவர் உயிரிழப்பு; ஒருவர் காயம்!

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

சிலாபம் – பண்டாரவத்தை பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் சிறிய லாரி ஒன்று ரயிலில் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார், மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று புதன்கிழமை நண்பகல் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் லுனுவில – பண்டிரிப்புவ பகுதியைச் சேர்ந்த எல். ஜி. அருண கயந்த குமார (வயது 27) ஆவார். காயமடைந்த சிலாபம் – அதுவான பகுதியைச் சேர்ந்த எஸ். குமார ஜோதி சிகிச்சைக்காக சிலாபம் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து சிலாபம் நோக்கிச் சென்ற மின்சார ரயிலின் காக்கப்பள்ளி – சவரன ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

லாரி கவனக்குறைவாக ரயில் கடவையைக் கடந்ததால் விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். விபத்து நடந்த நேரத்தில் அந்தப்பகுதியில் மழை பெய்து கொண்டிருந்தது.

சடலம் சிலாபம் பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# விமலசுரேந்திர நீர்த்தேக்கம் நிரம்பி வான் மேவி பாய்கின்றது!

**(க.கிஷாந்தன்)**

நோர்டன்பிரிட்ஜ் விமலசுரேந்திர நீர்த்தேக்க பகுதியில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழையின் காரணமாக, விமலசுரேந்திர நீர்த்தேக்கம் முழுமையாக நிரம்பி மேலதிக நீர் இன்று காலை முதல் வான் மேவி பாய்கின்றது.

இந்த நீர்மட்டம் அதிகரித்ததன் காரணமாக களனி ஆற்றின் நீர்மட்டம் சற்று உயர்ந்துள்ளது என்று நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனுடன், காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டம் விரைவாக உயர்ந்து, நிரம்பி வழியும் நிலையில் உள்ளன என்று பொறியலாளர்கள் கூறியுள்ளனர்.

கெனியன், லக்சபான, நவ லக்சபான, பொல்பிட்டிய மற்றும் விமலசுரேந்திர நீர்த்தேக்கங்களின் மின் உற்பத்தி கொள்ளளவு அதிகபட்ச மட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தெதுருஓயாவின் 08 வான் கதவுகளும் 13 அடி உயரத்துக்குத் திறக்கப்பட்டன!

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

நாட்டில் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக தெதுருஓயாவின் 08 வான் கதவுகளும் 13 அடி உயரத்துக்குத் திறக்கப்பட்டுள்ளன என்று பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இன்று வியாழக்கிழமை நண்பகல் 11.50 மணிக்கு இந்த நிலை தெதுரு ஓயாவில் காணப்பட்டது என்றும் செக்கனுக்கு 71800 கனஅளவு நீர் பாய்வதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.



# பேராறு குளத்தின் வான் கதவு திறப்பு; பறங்கியாறு ஊடாக பெருக்கெடுக்க வாய்ப்பு!

(மன்னார் நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழை காரணமாக பேராறு குளத்தின் வான் கதவு ஒன்று நேற்று திறக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த வான் நீரானது மன்னார் மாவட்டத்தின் பறங்கி ஆறு ஊடாக பெருக்கெடுக்க வாய்ப்புள்ளது என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாகப் பேராறு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்படுவதற்கான வாய்ப்புள்ளது என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பறங்கி ஆற்றின் தாழ் நில பிரதேசங்களில் வாழும் மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச மக்கள் மிகவும்



அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேய்ச்சல் தரைக்காக கால் நடைகளைக் கொண்டு சென்ற பண்ணையாளர்கள் தங்களின் பாதுகாப்பு கருதி பாதுகாப்பான இடங்களை நோக்கி நகருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் தங்களின் பாதுகாப்புக் கருதி திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொடர்பில் இருக்குமாறும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



# வடக்கின் மையப் பகுதியான மாங்குளத்தில் மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்!

## அமைக்கப்பட்டால் ஐந்து மாவட்டங்களுக்கும் நன்மை என்கிறார் ஆளுநர்

வடக்கு மாகாணத்தின் மையப் பகுதியான மாங்குளத்தில் மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் அமைக்கப்பட்டால் மட்டுமே, ஐந்து மாவட்ட மக்களும் அதன் நன்மைகளைச் சமமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

எனவே, மாங்குளத்தில் இத்திணைக் களத்துக்காக ஒதுக்கப்பட்ட காணியில் புதிய நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும் அவர் அதிகாரிகளை வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் கீழ், 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்கள் குறித்த மாதாந்தக் மீளாய்வு கூட்டம், ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சுதேச மருத்துவத் திணைக் களத்தை அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் தற்காலிகமாக கிளிநொச்சிக்கு இடமாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும், எமது நீண்டகால இலக்கு மாங்குளமே ஆகும். மாங்குளத்தில் நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்ட பின்னர், திணைக்களத்தை அங்கு முழுமையாக நகர்த்த வேண்டும். அதுவே அனைத்து மாவட்ட மக்களுக்கும் இலகுவான அணுகலை வழங்கும்.

2026 ஆம் ஆண்டில் மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் புதிய உத்வேகத்துடன் வடக்கு மாகாணத்தில் ஒரு முன்மாதிரியான திணைக்களமாகச் செயற்பட வேண்டும். கடந்த காலங்களில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தொடர்ச்சியாகக் கூறிவந்தீர்கள். தற்போது அப்பிரச்சினை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனவே, இனியும் காரணங்கள் கூறிக்கொண்டிருக்காது மக்களுக்கான சேவைகளை வினைத்திறனுடன் வழங்க வேண்டும்.





அதிகாரிகள் முன்னறிவிப்பின்றி மருத்துவமனைகளுக்குத் திடீர் களப் பயணங்களை மேற்கொள்ள வேண்டும். அங்குள்ள உண்மை நிலவரங்களை ஆராய்வதுடன், மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிய வேண்டும். அங்கு நிலவும் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தக் கலந்துரையாடலின்போது, சுகாதார அமைச்சு, சுகாதாரத் திணைக்களம், சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் ஆகியவற்றின் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி, பிரதிப் பிரதம செயலாளர்களான (திட்டமிடல், நிதி, பொறியியல் சேவை), கட்டடங்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், சுகாதார மற்றும் சுதேச மருத்துவத் திணைக்களங்களின் பணிப்பாளர்கள், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் கணக்காளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# விஜய் முன்னிலையில் த.வெ.கவில் இணைந்தார் செங்கோட்டையன்!



எம்.எல்.ஏ. பதவியை நேற்று இராஜினாமா செய்த நிலையில், முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் இன்று தமிழக வெற்றிக் கழகத்தில் தனது ஆதரவாளர்களுடன் இணைந்தார்.

அ.தி.மு.கவில் இருந்த எம்.ஜி.ஆர் காலத்து மூத்த அரசியல்வாதியான செங்கோட்டையன், 2026 தேர்தல் வெற்றிக்கு கட்சி ஒன்றிணைப்பை வலியுறுத்தி, அண்மையில் பழனிசாமிக்கு 10 நாள்கள் காலக்கெடுவை விதித்தார்.

அ.தி.மு.கவிலிருந்து ஏற்கெனவே பிரிந்திருக்கும் ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி. தினகரன் ஆகியோருடன் பசும்பொன்னில் கடந்த சில தினங்களுக்கு முன் நடைபெற்ற தேவர் ஜெயந்தி விழாவில் பங்கேற்றார். இதன் தொடர்ச்சியாக, கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து செங்கோட்டையன் நீக்கப்பட்டார்.

இந்தச் சூழலில் தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்திய செங்கோட்டையன், நேற்று சென்னை தலைமைச் செயலகம் வந்தார். சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவுவை சந்தித்து, தனது எம்.எல்.ஏ. பதவி இராஜினாமா கடிதத்தை வழங்கினார்.

இந்த நிலையில், இன்று சென்னை அருகே பனையூரில் உள்ள தமிழக வெற்றிக் கழக தலைமை அலுவலகத்துக்கு வந்த செங்கோட்டையன், அங்கு அக்கட்சியின் தலைவர் விஜய்யை சந்தித்து பேசினார். பின்னர் விஜய் முன்னிலையில் அக்கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். அவருடன் அ.தி.மு.க. முன்னாள் எம்.பி. சத்தியபாமா உள்ளிட்ட ஆதரவாளர்களும் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்.

# செங்கோட்டையனின் அனுபவம் த.வெ.க.வுக்கு பெரிய உறுதுணை

## விஜய் வரவேற்பு



செங்கோட்டையனுடைய அரசியல் அனுபவமும், அரசியல் களப்பணியும் நம்முடைய தமிழக வெற்றிக் கழகத்துக்கு மிகப்பெரிய உறுதுணையாக இருக்கும் என்று அக்கட்சியின் தலைவர் விஜய் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள காணொலியில் பதிவில், "20 வயது இளைஞராக இருந்தபோது எம்.ஜி.ஆரை நம்பி, அவருடைய மன்றத்தில் சேர்ந்தவர். அந்த சிறிய வயதிலேயே எம்.எல்.ஏ. என்ற ஒரு பெரிய பொறுப்பை ஏற்றவர். அதன் பிறகு அவருடைய பயணத்தில், அந்த இயக்கத்தின் மிகப்பெரிய இருபெரும் தலைவர்களுக்கு உறுதுணையாக அரசியல் களத்தில் இருந்தவர்.

இப்படி 50 ஆண்டுகளாக ஒரே இயக்கத்தில் இருந்த அண்ணன் செங்கோட்டையனுடைய அரசியல் அனுபவமும், அரசியல் களப்பணியும் நம்முடைய தமிழக வெற்றிக் கழகத்துக்கு மிகப்பெரிய உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் அவரையும், அவருடன் இணைந்த மற்றவர்களையும் மக்கள் பணியாற்ற வரவேற்கிறேன். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# நீர்மின் நிலையத்தைப் பாதுகாத்த சி.ஐ.எஸ்.எவ். வீரர்களுக்கு விருது



நீர்மின் நிலையத்தை பாதுகாத்த மத்திய தொழில் பாதுகாப்புப் படை (சி.ஐ.எஸ்.எவ்) வீரர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக கடந்த மே 7 ஆம் திகதி ஒபரேஷன் சிந்தூர் தாக்குதலை இந்தியா மேற்கொண்டது.

இதையடுத்து, எல்லை கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காஷ்மீரின் பாராமுல்லா மாவட்டத்தில் ஜீலம் நதியை அண்மித்து அமைக்கப்பட்டுள்ள உரி நீர் மின் நிலையத்தை குறிவைத்தும் பாகிஸ்தான் ட்ரோன் தாக்குதல் நடத்தியது.

அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த சி.ஐ.எஸ்.எப் வீரர்கள் பாகிஸ்தான் ட்ரோன்களை சுட்டு வீழ்த்தினர்.

இதனால் அந்த அணை தப்பித்தது. பாகிஸ்தானுக்கு எதிரான ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட 19 சி.ஐ.எஸ். எவ். அதிகாரிகள் மற்றும் வீரர்களுக்கு, டில்லியில் உள்ள சி.ஐ.எஸ்.எப். தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்த விழாவில் விருதுகள் வழங்கப்பட்டன.




# வெள்ளை மாளிகை அருகே துப்பாக்கிச் சூடு: ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஒருவர் கைது

வெள்ளை மாளிகை அருகே நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தாக்குதலில் இரண்டு காவலர்கள் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வொஷிங்டன் நகரின் மையப்பகுதியில், வெள்ளை மாளிகைக்கு அருகே நடந்த இந்த துப்பாக்கிச்சூடு தாக்குதலில், அமெரிக்க தேசிய பாதுகாப்புப் படை வீரர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

மேற்கு விர்ஜீனியா தேசிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த இந்த வீரர்கள், உடனடியாக சிகிச்சைக்காக இரண்டு வெவ்வேறு மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அதிகாரிகள் துரிதமாகச் செயல்பட்டு, தாக்குதல் நடத்திய நபரைக் கைது செய்தனர். தாக்குதலின்போது அந்த நபரும் கடுமையாகக் காயமடைந்துள்ளார் என கூறப்படுகிறது.

இந்த சம்பவம் நடந்த போது, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தேங்க்ஸ்கிவிங் விடுறையை கொண்டாடுவதற்காக புளோரிடாவில் உள்ள தனது மார்-ஏ-லாகோ விருந்தகத்தில் இருந்தார். இந்த தாக்குதல் குறித்த விவரங்கள் உடனடியாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான தனது ட்ரூத் தளத்தில் அவர் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றவாளியை 'மிருகம்' என்று குறிப்பிட்டுள்ள ட்ரம்ப், "காயமடைந்திருந்தாலும், அந்த மிருகம் மிகப் பெரிய விலையைக் கொடுக்க நேரிடும்," என்று எச்சரித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புப் படை வீரர்களை பாராட்டியுள்ள ட்ரம்ப், இந்தத் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து, பாதுகாப்பை மேலும் பலப்படுத்த உடனடி நடவடிக்கை எடுத்துள்ளார். அதன்படி, வொஷிங்டன் நகரத்துக்கு மேலும் 500 தேசிய பாதுகாப்புப் படை வீரர்களை அனுப்புமாறு பாதுகாப்புச் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துக்கு அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ், முன்னாள் ஜனாதிபதி ஒபாமா உள்ளிட்டோரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ரஹ்மானுல்லா லகன்வால் என்று பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். வொஷிங்டன் டி.சி.யில் உள்ள வெள்ளை மாளிகைக்கு அருகே, ரஹ்மானுல்லா முதலில் அங்கிருந்த பெண் காவலரின் மார்பிலும், தலையிலும் துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

பின்னர் அங்கிருந்த மற்றொரு காவலரையும் நோக்கிச் சுட்டிருக்கிறார். இதனைக் கண்ட அருகில் இருந்த இன்னொரு காவலர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தாக்குதல் நடத்திய நபரைச் சுட்டு வீழ்த்தியுள்ளார்.

இதில் ரஹ்மனுல்லாவுக்கு காயங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவருடைய உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். 29 வயதான அவர், கடந்த 2021 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் நிலவிய குழப்பான சூழலின்போது அமெரிக்காவில் தஞ்சம் அடைந்தவர் என்று கூறப்படுகிறது.

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் சிறையில் உயிரிழந்தார் என்ற தகவலால் சர்ச்சை





ராவல்பிண்டி சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், சிறைக்குள் உயிரிழந்துவிட்டார் என ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானை தளமாகக் கொண்ட சமூக ஊடகக் கணக்குகள் உறுதிப்படுத்தப்படாத தகவலை வெளியிட்டுள்ளன.

அவர் சிறையில் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் கொல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த குற்றச்சாட்டை பலுசிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் தமது உத்தியோக பூர்வ எக்ஸ் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டு அமைச்சகம் இக்கருத்தை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

வியாழக்கிழமை 27/11/2025

**மொண்ட்ரியல் நகரில் 15 வாகனங்கள் தீக்கிரை**



C3▶





# கனடாவில் கற்பக விநாயகர் ஆலயத்தில் முகமூடி அணிந்தவர்களால் கொள்ளை!

கனடாவின் பிரம்ரன் நகரில் உள்ள சிறி கற்பக விநாயகர் ஆலயத்தில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்ற வேளையில் உள்ளே புகுந்த முகமூடியணிந்த கொள்ளையர்கள் உண்டியலை கொள்ளையிட்டு தூக்கிக்கொண்டு செல்லும் காட்சிகள் தற்போது சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இவ்வாறு கொள்ளையர்கள் கொள்ளையிடும் சந்தர்ப்பத்தில் பக்தர்களும் ஆலய மதகுமாரும் செய்வதறியாது பார்த்திருக் கொண்டிருந்துள்ளனர்.

இதேவேளை, இந்த சம்பவம் இடம்பெற்ற போது அங்கிருந்த பக்தர்களும் ஆலய மத குருமாரும் அதிர்ச்சியடைந்திருந்தமை காணொலிகளில் காணக்கூடியதாக உள்ளது.



# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குறித்து தவறான வார்த்தையை கூறிவிட்டேன்

## கனடாப் பிரதமர் தெரிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குறித்து பேசும்போது, தவறான வார்த்தைகளைப் பயன்படுத்திவிட்டேன் என்று கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற ஜி20 உச்சி மாநாட்டைத் தொடர்ந்து, கனடா பிரதமர் மார்க் கார்னி ஊடக வியலாளர்களை சந்தித்தபோது, ட்ரம்பை சந்திப்பது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பினார்கள் ஊடகவியலாளர்கள்.

பேச்சுவார்த்தைகள் நடத்தினோம், நானும் பிஸியாகிவிட்டேன், மீண்டும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது பேசுவோம் என்று கார்னி கூறினார்.

C2▶



# கட்டார் மக்கள் கனடா செல்ல இனி விசா பெறத் தேவையில்லை

கனடா அரசு, கட்டார் மக்கள் இனி கனடாவுக்கு பயணம் செய்ய விசா பெற தேவையில்லை என்று அறிவித்துள்ளது.

இந்த புதிய விதி நவம்பர் 25 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இம்மாற்றம், இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் முக்கியமான படியாகக் கருதப்படுகிறது.

கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் லீனா மெட்லெஜ் டியாப், "விசா விலக்கு, வணிகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிக்கும். இது சுற்றுலா மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும்" எனக் கூறியுள்ளார்.

ஆனால், விசா விலக்கு வழங்கப்பட்டாலும், கட்டார் குடிமக்கள் கனடாவுக்கு விமானம் மூலம் பயணம் செய்யும்போது eTA (Electronic Travel Authorization) பெற வேண்டும்.

நவயு ஓன்லைனில் விண்ணப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்திற்கு செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, கிரெடிட் கார்டு மற்றும் மின்னஞ்சல் முகவரி மட்டுமே தேவையாகும். இதற்கான கட்டணம் 7 கனேடிய டொலர் ஆகும்.

பெரும்பாலான விண்ணப்பங்கள் சில நிமிடங்களில் அங்கீகரிக்கப்படும்.

நவயு, பாஸ்போர்டுடன் இணைக்கப்பட்டு 5 ஆண்டுகள் வரை செல்லுபடியாகும்.

ஒவ்வொரு பயணத்திற்கும் அதிகபட்சம் 180 நாட்கள் தங்க அனுமதி வழங்கப்படும்.

2024 இல் இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் 325 மில்லியன் கனேடிய டொலர் அளவுக்கு சென்றது. அதே ஆண்டில், 9,000 கட்டார் குடிமக்கள் கனடாவுக்கு பயணம் செய்தனர், இது முந்தைய ஆண்டை விட 11.5 சதவீதம் அதிகம்.

மேலும், செயற்கை நுண்ணறிவு, தூய்மையான எரிசக்தி, வேளாண்மை, முக்கிய கனிமங்கள் போன்ற துறைகளில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்றி வருகின்றன.

இந்த புதிய விசா விலக்கு, சுற்றுலா, வணிகம் மற்றும் மனித பரிமாற்றங்களை அதிகரித்து, கனடா – கட்டார் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.



### அமெரிக்க ஜனாதிபதி...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது, கடைசியாக கார்னி எப்போது ட்ரம்புடன் பேசினார் என்பது குறித்து விளக்குமாறு மீண்டும் ஊடகவியலாளர்கள் கேட்க, எனக்கென்ன கவலை அல்லது யாருக்கு என்ன கவலை என்னும் ரீதியில், 'Who cares?' என்று கார்னி கூறிவிட்டார்.

எதிர்க்கட்சியினர் அவரது பதில் குறித்து கடுமையாக விமர்சிக்கத் துவங்க, தற்போது கார்னி, தனது தவறை ஒப்புக்கொண்டுள்ளார்.

முக்கியமான ஒரு விடயம் குறித்து பேசும்போது, நான் பயன்படுத்திய வார்த்தைகள் தவறானவை என்று கூறியுள்ள கார்னி, நான் கனடாவின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது கனேடியர்களுக்கு ஒரு உறுதி அளித்தேன்.

நான் தவறு செய்தால், அதை நான் ஒப்புக்கொள்வேன் என்று நான் கூறியிருந்தேன்.

அதன்படி, நான் தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தியதை ஒப்புக்கொள்கிறேன் என்று கார்னி கூறியுள்ளார்.



# மொண்டிரியல் நகரில் 15 வாகனங்கள் தீக்கிரை

கனடாவின் மொண்டிரியல் நகரில் செயின்ட்–லாரன்ட் பகுதியில் உள்ள ஒரு வாகனத் தரிப்பிடத்தில் சுமார் 15 வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளன.

அதிகாலை வெடிப்புசார்ந்த தீவைத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக மொண்டிரியல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த ளயஅந இடம் கடந்த நான்கு ஆண்டுகளில் பலமுறை இதே மாதிரியான தீவைத்தல் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளது.

லெபோ தெருவிலும் ஜின்ஸ் தெருவின் அருகிலும் ஏற்பட்ட தீ விபத்து குறித்து 911 அழைப்புகளைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றனர்.

தீயணைப்பு துறையினர் தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு இருந்தனர் என பொலிஸ் பேச்சாளர் கரோலின் செவ்ரெபில்ஸ் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டிலும் இதே தொழில் நிலையம் இதேபோன்ற தீவைத்தல் தாக்குதலுக்கு உள்ளானது.

அதற்குமுன்பு மூன்று முறை இதே இடம் குற்றவாளிகளால் இலக்காகியிருந்ததாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த முறை சுமார் 15 மறுவிற்பனைக்காக இருந்த வாகனங்கள் சேதமடைந்துள்ளன. எனினும் தொழில் நிறுவனம் சேதமடையவில்லை, யாரும் காயமடையவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் தீவைத்தலில் பயன்படுத்தப்பட்ட எரிவைப்புப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் அல்லது சந்தேக நபர்களைத் தேடும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

விசாரணையாளர்கள் சம்பவ இடத்துக்கு சென்று மேலதிக ஆய்வு மேற்கொள்வார்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை எந்த கைது நடவடிக்கையும் மேற்கொள்வப்படவில்லை.

# செயற்கைக்கோளை உருவாக்கி கனடிய ஆய்வாளர்கள் சாதனை

கனடாவின் மனிட்டோபா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், கனடா இதுவரை செல்லாத இடமான நிலாவின் சுற்றுப்பாதைக்கு செல்கின்ற ஒரு புதிய செயற்கைக்கோளை உருவாக்கி வருகின்றனர்.

மனிட்டோபா பல்கலைக்கழகத்தின் ஸ்டார்லெப் STARLab குழுவும், மெகாலேன் ஏரோஸ்பேஸ் Magellan Aerospace நிறுவனமும் இணைந்து, பால்பெட்டி அளவிலான கியுப்செட் CubeSat எனப்படும் சிறு செயற்கைக்கோளை உருவாக்கி வருகின்றன.

இது நிலாவைச் சுற்றிவரும் முதல் கனேடிய செயற்கைக்கோளாக வரவிருக்கிறது.

இந்த திட்டத்திற்காக மெகாலேன்



ஏரோஸ்பேஸ் நிறுவனத்திற்கு கனடிய விண்வெளி முகாமை நிறுவனம் 6.9 மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது.

நிலாவில் கனேடிய தொழில்நுட்பங்கள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ளன.

அபோல்லோ 11 லேண்டர் கால்கள் அதற்குச் சான்றாக குறிப்பிட முடியும் எனினும், நிலா சுற்றுப்பாதையில் கனடா தனது சொந்த செயற்கைக்கோளை அனுப்புவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த செயற்கைக்கோள் 2027 ஆம் ஆண்டு இறுதி காலத்தில் ஏவப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது நிலாவின் கனிமங்களை வரைபடமாக்கி, எரிபொருள் உற்பத்திக்கோ அல்லது எதிர்கால குடியேற்றத்துக்கோ பயனுள்ள வளங்களைக் கண்டறிய தகவல்களைச் சேகரிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.